சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

Case No. OS. 13/2020

2023ம் ஆண்டு ஜனவரி மாதம் 10ம் நாள் செவ்வாய்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.சித்ரா பென்ஞ் கிளார்க் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்யப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரோஜா | தொழில் | |
| தந்தை/கணவர் பெயர் | கோவிந்தசாமி | ஜாதி | |
| கிராமம் | இடையஞ்சாத்து | சமயம் | |
| தாலுக்கா | வேலூர் | வயது | |

**10.01.2023** முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 15.07.1974 தேதியிட்ட கிரய பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1,** 05.05.1981 தேதியிட்ட செட்டில்மென்ட் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2,** பட்டா நெம்பர் 15-க்கான கணினி சிட்டா பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.3,** 26.06.2019 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சலக ரசீது **வா.சா.ஆ.4,** 1ம் பிரதிவாதி அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.5,** 2ம் பிரதிவாதி அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.6,** 04.07.2019 தேதியிட்ட பதில் அறிவிப்பு **வா.சா.ஆ. 7** தாக்கல் செய்கிறேன்.

மேற்கொண்டு ஆவணங்களை குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.